

# இயேசு தான் என் இரட்சகர்

## வாலிபர் பகுதி

சகோ . பிரேமா டேவிட்

**மரியாள், என் ஆத்துமா கர்த்தரை மகிமைப்படுத்துகிறது. என் ஆவி என் இரட்சகராகிய தேவனில் களிகூறுகிறது. லூக்கா 1:46,47**

கிறிஸ்துவில் அன்பான வாலிபத்தம்பி தங்கைகளே, ஆண்டவரும், நம்முடைய இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் கிறிஸ்துமஸ் வாழ்த்துக்கள். Christmas celebration தொடங்கியிருச்சு? நல்லது. ஆனால் உண்மையான கிறிஸ்துமஸ் கொண்டாட்டம் என்ன என்று இயேசுவின் தாய் மரியாளே சொல்வதைப் பார்ப்போமா!

## மரியாளின் குடும்பம்

ஆபிரகாம் வழி வந்த தாவீதின் மகனான சாலொமோன் வழியில் வந்த யோசேப்புக்கும், தாவீதின் இன்னொரு மகனான நாத்தானின் வழி வந்த மரியாளுக்கும் திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. யூத கலாச்சாரத்தில் ஒரு வருடம் கழித்து தான் திருமணம் நடைபெறுமாம்.

## மரியாளை தேடி தேவதூதன்

மரியாள் நசரேத்தில் வசித்து வந்தாள். இந்த காலத்தில் தான் கர்த்தருடைய தூதன் மரியாள் இருந்த வீட்டுக்குள் பிரவேசித்து, கிருபை பெற்றவளே வாழ்க! கர்த்தர் உன்னுடனே இருக்கிறார். ஸ்திரீகளுக்குள்ளே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள் என்றான். (லூக்கா 1:28). கேளிக்கை விடுதிகளும், விபச்சார விடுதிகளும் நிறைந்த, எந்த ஒரு பெருமையும் இல்லாத ஒரு ஊராகிய நாசரேத்தில் தவறான வழிகளில் எத்தனையோ பெண்கள் சென்று கொண்டிருந்தபோது, திருமணத்திற்காக நிச்சயம் செய்யப்பட்ட ஒரு கன்னிகையாகிய மரியாளைத் தேடி ஒரு தேவதூதன், தேவனாலே அனுப்பப்பட்டு வந்தான். எத்தனையோ பெண்கள் இருந்தாலும் நீ தான் ஆசீர்வதிக்கப்பட்டவள், கிருபை, பாக்கியம் பெற்றவள் என்றான். கர்த்தருக்கும், கர்த்தருடைய வார்த்தைக்கும் பயந்து, வரப்போகிற கணவனுக்கு உண்மையான மனைவியாக கன்னிகையாக தன்னை பரிசுத்தமாக காத்துக் கொள்பவளாக இருந்ததாலே இந்த ஆசீர்வாதம்.

இதை வாசிக்கின்ற நீங்கள் வீட்டிலிருந்தாலும், வெளியில் சென்றாலும் கர்த்தர் என்னை காண்கிறார், என் சிந்தனையைக் கூட அறிந்திருக்கிறார் என்ற உணர்வோடு தீய சிந்தனை, பழக்க வழக்கங்களை உதறித் தள்ளி மரியாளைப் போல இருந்தால் நிச்சயம் உங்களையும் தேடி ஒரு தேவதூதன், தேவனாலே அனுப்பப்படுவான். இன்றைய வாலிபர்கள் கையில் செல்போனை வைத்துக் கொண்டு தங்கள் இஷ்டம் போல வாழ்ந்து கொண்டிருக்கும் போது மரியாளைப் போல 'கற்புள்ள' பரிசுத்தமான வாலிபர்களை, பரிசுத்தமான வாலிபப்பெண் பிள்ளைகளை கர்த்தர் தேடுகிறார். ஆண்டவர் எல்லாரையும் நேசிக்கிறவர் அல்லவா? பாவிகளை நேசிக்கிறவர் அல்லவா? ஏன் பரிசுத்தமுள்ள மரியாளை மட்டும் தேடிச் செல்ல வேண்டும் என்று நினைக்கிறீர்கள் தானே! தேவன் தம்முடைய விசேஷித்த காரியங்களைச் செய்ய பரிசுத்தமுள்ள, பரிசுத்தத்திற்காக எதையும் செய்ய ஆர்வமான ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவர்கள் மூலமாகத்தான் மற்றவர்களுக்கும் நன்மை செய்வார். உங்கள் உள்ளத்தையும், உடலையும், நீங்கள் பயன்படுத்தும் பொருள்கள், உங்கள் ஞானம் எல்லாவற்றையும் பரிசுத்தமும், தேவனுக்குப் பிரியமான ஜீவபலியாய் அவரிடம் ஒப்புக்கொடுத்து விடுங்கள். நிச்சயம் உங்களையும் தேடி ஒரு தேவதூதன் அனுப்பப்படுவான். நீங்கள் கிருபை பெற்றவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டவன்(ள்).

# மரியாளைக் குறித்த தேவதிட்டம்

**"தேவ தூதன் அவளை நோக்கி, பயப்படாதே நீ தேவனிடத்தில் கிருபை பெற்றாய், இதோ நீ கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாய் அவருக்கு இயேசு என்று பேரிடுவாயாக" லூக்கா 1:30,31 ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள். "அவருக்கு இம்மானு வேல் என்று பேரிடுவாள்" ஏசாயா 7:14- படி**
இஸ்ரவேல் நாட்டில் எத்தனையோ பெண்கள் 35 வயது வரை கூட திருமணம் ஆகாமல் தங்கள் வயிற்றில் தேவகுமாரன் பிறக்கணும் என் காத்திருந்த பெண்கள் நடுவில், ஒருபுறம் பாவத்தில் உழன்று கொண்டிருக்கும் நாசரேத்தூர் பெண்களின் நடுவில் இந்த கன்னிகை மரியாளுக்குத்தான் தேவக் கிருபை கிடைத்தது, தேவத்திட்டம் அறிவிக்கப்பட்டது. இது எப்படி ஆகும்? எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லையே என்று மரியாள் கேட்டபோது, தூதன் பரிசுத்த ஆவியினாலே நீ கர்ப்பவதியாகி தேவகுமாரனைப் பெறுவாய். உன் இனத்தாளான எலிசபெத்துக்கும் தேவன் ஒரு குழந்தையைக் கொடுத்துள்ளார். தேவனாலே கூடாத காரியம் ஒன்றுமில்லை என்றான். உடனே மரியாள் இதோ, நான் ஆண்டவருக்கு அடிமை, உம்முடைய வார்த்தையின்படி எனக்கு ஆகக்கடவது என்று சொல்லி அந்தத் திட்டத்திற்கு தன்னை ஒப்புக் கொடுத்தாள். ஒரு பெண் கையும் களவுமாகப் பிடிக்கப்பட்டால் கல்லால் எறிந்து கொல்லும் அந்தக் காலத்தில் மரியாள் கர்ப்பவதியானாள் என்று தெரிந்தால் நிச்சயம் மரணம் தான், அவமானம் தாங்க முடியாது, திருமணம் நின்று விடும். யோசேப்பிடம் இதை எப்படி சொல்வது என்ற பயமெல்லாம் மரியாளுக்கு இருந்தாலும் ஆண்டவர் என்ன சொல்கிறாரோ, அதுதான் வாழ்வில் நடக்கணும் அதற்காக நான் எதை இழந்தாலும் பரவா யில்லை பாவிகளை காப்பாற்ற இயேசு பிறப்பதற்காக என்னை கொடுக்கிறேன். என்ற ஆர்வத்தோடும் நம்பிக்கையோடும் இதோ, நான் அடிமை, உங்கள் வார்த்தையின்படியே என் வாழ்வில் நடக்கட்டும் என்று மரியாள் தன்னை ஒப்புக்கொடுத்தாள். பரிசுத்தமான தேவனுடைய வார்த்தைக்கு கீழ்ப்படிந்த மரியாள் பரிசுத்த ஆவியினால் கர்ப்பவதியானாள். எலிசபெத்தின் வீட்டிற்குச் சென்று அவரை வாழ்த்தினாள். எலிசபெத்தும் பரிசுத்த ஆவினாலே, உண்மையிலே நீ ஆசீர்வதிக்கப்பட்டவள். இது யாருக்குமே கிடைக்காத பாக்கியம். விசுவாசித்த நீ பாக்கியவதி. உனக்கு சொல்லப்பட்டது நிறைவேறும் என்றார். அப்படியே எல்லா ஜனத்திற்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியாக இயேசு பெத்லகேமிலே பிறக்கப் போகிறார் என்கிறதை நினைத்துதான் என் ஆவி என் இரட்சகராகிய தேவனின் களிகூறுகிறது என்கிறாள். தன் எதிர்காலம் திருமணம் பற்றி கவலைப்படாமல், சூழ்நிலையைப் பார்க்காமல், கர்த்தரை எப்படி அவளால் மகிமைப்படுத்த முடிந்தது. எல்லாரையும் விட, எல்லாவற்றையும் விட, தன்னையும் கூட மறந்து தேவனுக்காக என்னை தெரிந்து கொண்டாரே! எனக்காகவும் சிலுவையில் மரிக்கப் போகிறாரே அவரே என் இரட்சகர், அவரில் சந்தோஷமாயிருப்பதே எனக்கு பெலன் என்று மரியாள் கிறிஸ்துவைக் கொண்டாடினாள்.

உங்களைக் குறித்தும் ஒரு தேவதிட்டம் உள்ளது. உங்களை பாவங்களிலிருந்து காப்பாற்றுகிறவர் இயேசுவே. மரியாள் நமக்காக சிலுவையில் மரிக்கவில்லை. மரியாளே இயேசுவை என் இரட்சகர் என்று அறிக்கையிடும் போது மரியாளைப் போல் உங்கள் உள்ளத்தில் இயேசுவே என் பாவங்களை மன்னித்து என் உள்ளத்தில் வாரும். நீர் எனக்காக சிலுவையில் மரித்து எழுந்ததை விசுவாசிக்கிறேன். நீரே என் இரட்சகர் என்று சொல்லுங்கள். இப்பொழுதே இயேசு உங்களுக்குள் வருவார். பரிசுத்த ஆவியானவர் நீங்கள் அவர் பிள்ளை என்று சாட்சியிடுவார். தேவனின் பிள்ளை என்ற அதிகாரத்தைப் பெற்ற உங்களுக்குள் மிகுந்த சந்தோஷம் உண்டாகும். உங்கள் பாவம் மன்னிக்கப்பட்ட நம்பிக்கை யுண்டாகும் தொடர்ந்து இந்த சந்தோஷத்தை இழக்காமல் வார்த்தையாகிய தேவனோடு வாழும் போது இதுபோன்ற சந்தோஷம் வேறு எதுவுமே இல்லை என்பீர்கள். மனிதனாய் பிறந்த இயேசு மீண்டும் ராஜாவாகப் போகிறார். ராஜாவாக வரப்போகிறார் இயேசுவைச் சந்திக்க இயேசுவில் நிலைத்திருந்து இயேசு தான் இரட்சகர் என்று மற்றவர்களுக்கும் சொல்லுங்கள். இலவசமாய் பெற்ற இயேசுவை, சந்தோஷத்தை இலவசமாய் கொடுங்கள். கர்த்தர் தாமே இரட்சண்யத்தின் சந்தோஷத்தினால் உங்களையும் உங்கள் குடும்பங்களையும் நிரப்புவாராக!